www.ctct.ca

Phone: 416-282-8832

Email: info@ctct.ca

## ஊடக அறிவித்தல்

**September 28, 2015**

# கனேடியத் தமிழர் அறக்கட்டளை

**CANADIAN TAMIL COMMUNITY TRUST Inc.**

ஈழத்திலும், புலம்பெயர்ந்து பலதேசங்களிலும் அவதியுற்றிருந்த எம்சொந்தங்களை மீட்டெடுப்பதற்காக கனேடியத்தமிழர் தாம் வருந்தியுழைத்த பணத்தை கடந்த காலங்களில் மனமுவந்து கொடுத்திருக்கின்றார்கள். மே 2009ல் ஆயுதப்போராட்டம் வலிந்து மௌனிக்கப்பட்ட பின் அங்கிருந்த எம் சொந்தங்களின் வாழ்வு சிதைக்கப்பட்டு அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டார்கள். புலம்பெயர் தேசங்களிலிருந்து அவர்களுக்குக் கிடைத்துவந்த ஆதரவும் தடைப்பட்டுவிட்டது. இந்நிலையில் சர்வதேசமும் சில சர்வதேச உதவி நிறுவனங்களும்தான் இலங்கையிலிருந்த அடக்குமுறைகளுக்கூடாகவும் தம்மாலான உதவிகளைச் செய்தன. காலப்போக்கில் கெடுபிடிகள் தளர்ந்து போக புலம்பெயர் தமிழர்கள் உதவி நிறுவனங்கள் மூலமாகவும், தனிப்பட்ட முறையிலும் தாயக உறவுகளுக்குப் பல பல உதவிகளைச் செய்யத் தொடங்கினர்.

2014-09-18 அன்று கனேடியத் தமிழர் அறக்கட்டளை (CANADIAN TAMIL COMMUNITY TRUST) என்ற இலாப நோக்கற்ற அமைப்பு இங்கு முறைப்படி பதிவு செய்யப்பட்டது. கடந்த ஒருவருடத்தில் இதன் இயக்குனர் சபை, ஈழத்தின் பலபாகங்களையும் உள்ளடக்கக்கூடியதாக விரிவுபடுத்தப்பட்டு, எமக்கென யாப்பு மற்றும் நடைமுறைவிதிகள் என்பன இயற்றப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அத்தோடு எமக்கெனவொரு இணையத்தளம், வங்கிக்கணக்கு என்பனவும் தொடங்கப்பட்டன. அத்துடன் எமக்கென சட்டவாளர், கணக்காளர் என்போரின் தொழில்சார் சேவைகளும் பெறப்பட்டுள்ளது. கனேடியத் தமிழர் அறக்கட்டளை அதன் பதிவுக்கான சட்டவரபுக்குட்பட்டு இயங்குவதை உறுதி செய்யும் வகையில் இதன் கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அறக்கட்டளையின் செயற்பாடுகள் அதன் நோக்கங்களிலிருந்து விலகாதிருக்கும் வகையில் நடைமுறைவிதிக்கோவை உருவாக்கப்பட்டுள்ளது. இதில் வருடாந்த சந்தாப்பணம் செலுத்தி எமது யாப்பு விதிகளை ஏற்பவர்களை அங்கத்துவார்களாக இணைக்கும் பணியும் தொடங்கப்பட்டுவிட்டது.

வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் என்பன கனேடியத் தமிழர் அறக்கட்டளையின் மூலக்கொள்கை ஆகும். எமது கட்டமைப்பின் நல்லெண்ணத்தையும் கொள்கைகளையும் விரும்பியேற்றுப் பலர் அங்கவத்துவர்களாக இணைந்து பணியாற்றத் தொடங்கியிருக்கின்றார்கள்.

இருப்பினும் புலம்பெயர்தேசத்தில் இருந்து தாயகமக்களின் மேம்பட்ட சுதந்திர வாழ்வுகென திரட்டப்பட்ட நிதியின் ஒரு பகுதி புலம்பெயர்தேசத்திலேயே தங்கிவிட்டதாகவும், இதை உரிய முறையில் கணக்கெடுத்துப் பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டுவருவதானது புலம்பெயர்மக்களின் நம்பிக்கையையும் அவர்களின் தொடர்ச்சியான ஈடுபாட்டையும் மீண்டும் வளரச்செய்யும் எனவும் சொல்லப்பட்டது. அத்தோடு இந்நிதி தாயக மக்களினதும், அகதிகளாகப் பல நாடுகளில் வாடும் எம்சொந்தங்களினதும் துயர் தீர்க்க உதவுமெனப் பரவலாக நம்பப்பட்டது. இதைக் கருத்திலெடுத்துப் பலரும் இதற்காக முயற்சி செய்தனர்.

தமிழ்கலை தொழில்நுட்பக்கல்லூரியானது தமிழ்மக்களின் சொத்தாகும். இக்கல்லூரி தனது கிளையொன்றை அமைப்பதற்காக Keele & Finch சந்திப்புக்கு அண்மையிலிருக்கும் கட்டிடமொன்றை வேறு பங்குதாரர்களுடன் இணைந்து Aug.2003 ஆண்டளவில் வாங்கியது. திரு.V.தெட்சனா அவர்கள் கல்லூரியின் சார்பில் நம்பிக்கை அடிப்படையில் உரிமையாளராக இருந்தார். அண்மையில் பங்குதாரர்களிடையே எழுந்த பிணக்கு நீதிமன்றம்வரை சென்றது. நீதிமன்ற முடிவின்படி இக்கட்டிடம் விற்கப்பட்டு திரு.V.தெட்சனா அவர்களிடம் அவரது பங்கு ($83,051.35) நீதிமன்றம் மூலம் கையளிக்கப்பட்டது. கனேடியத் தமிழர் அறக்கட்டளையின் கட்டமைப்பில் அவர் நம்பிக்கை கொண்டதால் அப்பணம் அவரது வழக்கறிஞர் மூலம் அறக்கட்டளைக்குக் கொடுக்கப்பட்டு வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இவரது முன்மாதிரியும், அர்ப்பணிப்புடனான உழைப்பும் எமக்குப் பெறும் ஊக்குவிப்பைத் தந்துள்ளது. தமிழ் மக்களின் சொத்துக்கள் தமிழ்மக்களால் நிர்வகிக்கப்பட்டு அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றவே பயன்படவேண்டுமென்ற புலம்பெயர்தமிழர்களின் எண்ணத்தை இவரின் செயல் பிரதிபலிப்பதாகவும், ஒரு முன்மாதிரியாகவும் அமைந்துள்ளது. இந்நிகழ்வானது இது போன்று ஆங்காங்கே தனிப்பட்டவர்களால் பேணப்படும் சொத்துக்கள், வெளிப்படைத்தன்மை கொண்டதும், கணக்காய்வுக்குட்பட்டதுமான சட்டபூர்வமாக இயங்கும் ஒரு சமூக அறக்கட்டளைக்கு வந்து சேரும் போது, தமிழினத்தின் மேம்பாட்டுக்குத் திட்டமிட்டுப் பலபணிகளைச் செய்திட முடியுமென நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம்.

தலைவர்

Rajmohan S.

இயக்குனர் அவை

கனேடியத் தமிழர் அறக்கட்டளை

Toronto, Canada.

Sep.28th,2015

ஊடகத்துறை

Gnaneswaran S.

இயக்குனர் அவை

கனேடியத் தமிழர் அறக்கட்டளை

Toronto, Canada.

Sep.28th,2015